# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை</u>

## <u>அசல் வழக்கு எண்.85 /2021</u>

DW 3 – திரு.நாகராஜன் த/பெ.கருப்பையா நாள். 06.03.2026.

(1969 ம் ஆண்டில் 44 வது பிரிவின்படி) திரு.J.அந்தோணி ரிஷான்தேவ், பி.பி.ஏ., எல்,எல்.,பி. (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற (இளநிலை உதவியாளர்) திருமதி.ராமு என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

<u>முதல் விசாரணை</u>

1. நான் இந்த வழக்கில் பிரதிவாதி தரப்பு 3 ம்சாட்சியாக சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளேன். எனது தரப்பு சங்கதிகளை நிரூபண வாக்குமூலம் வாயிலாக தாக்கல்செய்துள்ளேன். அதில கண்டுள்ள விவரங்கள் அனைத்தும் நன்கு தெரியும் அதில் இடம்பெற்றுள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1. வழக்கின் விவரங்கள் எனக்கு நன்குதெரியும் என்றால் சரிதான்.8 ம் பிரதிவாதியை எனக்கு 30 வருடங்களாக தெரியும். தாவா சொத்தில் வீடு கட்டுவது தொடர்பாக 8 ம்பிரதிவாதி என்னை 2019 ஆண்டு பார்த்தார். தேதி மாதம் நினைவில் இல்லை.கட்டிடத்தை பொறியாளர்மூலம் கட்டினேனா அல்லது நானே கட்டினேனா என்றால் நான் மேஸ்திரி அதனால் நானே கட்டினேன். நான் கட்டிடம் கட்டுவதற்கு தொண்டி பேரூராட்சி அலுவலகத்தில் பிளான் தாக்கல்செய்து அனுமதி பெறவில்லை என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. பொதுவாக தமிழநாட்டில் கட்டிடம் கட்டுவதற்கு Approval Plan பெற வேண்டும்என்றால் சரிதான். தாவா சொத்தில் கட்டுமானம் கட்டுவதற்கு Approval Plan பெறவில்லை என்றால் ச ரிதான். எப்போது கட்டுமானத்தை நிறுத்தினோம் என்றால் துவங்கி சுமார் 2 மாத காலத்தில்

நிறுத்தினோம்.எதற்காக கட்டுமானத்தை நிறுத்தப்பட்டது என்றால் அந்தவிவரம் எனக்கு தெரியாது.

2. தாவா இடத்தின் சர்வே எண் என்னவென்றால் தெரியாது. தாவா இடத்தின் நான்குமால் தெரியுமா என்றால் தெரியாது. 8ம் பிரதிவாதி ஒருவார காலத்திற்கு முன் என்னை சாட்சியம்அளிக்க அழைத்தார். தாவா சொத்து தற்போது யார்பெயரில் பட்டா உள்ளது என்றால் அப்துல்ஜபாத் பெயரில் உள்ளது.நான் அப்துல்ஜபாத்துக்கு நீண்ட காலமாக பழக்கம் என்பதால் அவருக்கு ஆதரவாக நீதிமன்றத்தில் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு தற்போது 9,10 பிரதிவாதிகளின் பெயரில் தான் பட்டா உள்ளது என்றும்நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 9,10 பிரதிவாதிகள் யார் என்றால் 8ம் பிரதிவாதியின் மருமகன்கள் ஆவார்கள். தாவாசொத்தை பற்றி எனக்கு முழு விவரங்கள் தெரியாது என்றும் நான் 8ம் பிரதிவாதிக்கு ஆதராவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தாவா சொத்தானது அப்துல்ஜபாத் சொத்து என்ற விவரம் மட்டும் எனக்கு தெரியும். அப்துல்ஜபாத் ரியல்எஸ்டேட் வியாபாரம் செய்கிறார் என்றால் அந்தவிவரம் எனக்கு தெரியாது.

**(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)**

(ஓம்/திரு.J.அந்தோணி ரிஷான்தேவ்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவாடானை